

கலைஞர் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தை மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் திறந்து வைத்தார். திறப்பு விழாவில் குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன், மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, நகர கழக பொறுப்பாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் விஜயகண்ணன், ஞானசேகரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் நாச்சிமுத்து, செல்வம், தங்கவேல் மாவட்ட நிர்வாகிகள் ராஜாராம், செல்வராஜ், வேலுமணி, குமாரபாளையம் நகர்மன்ற துணைத் தலைவர் வெங்கடேசன், இளைஞர் அணி அமைப்பாளர் பாலாஜி மற்றும் துணை அமைப்பாளர்கள் சுந்தர், நவலஜ ராஜா, கதிரவன், ஜெகதீஸ்குமார், முரளி, அன்பகம் இளமாறன், திரிசங்கு, சார்பு அணி நிர்வாகிகள் தனசேகர், ராதிகா, ஜெயதேவி, சௌந்தரம் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பழனிசாமியின் கபட நாடகம் மக்களிடம் எடுபடாது:

# பாலியல் குற்றவாளிகளின் சரணாலயம் அ.தி.மு.க. என்பது மீண்டும் அம்பலம்!

### போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிக்கை!



சென்னை, ஜன.10

அ.தி.மு.க. பாலியல் குற்றவாளிகளின் சரணாலயம் என்பது அம்பலமாகி விட்டது . எனவே பழனிசாமியின் கபட நாடகம் இனி மக்களிடையே எடுபடாது என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

பெண்கள் பாதுகாப்பில் தமிழ்நாட்டு மக்களிடம் நற்பெயர் பெற்று வரும் திராவிட மாடல் அரசின் மீது எப்படியாவது களங்கம் சுமத்தவேண்டும் எனும் சிறுபுத்தியோடு தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை என அருவருக்கத்தக்க வதந்தியைப் தொடர்ந்து பரப்பி வந்தார் பச்சைப் பொய் பழனிசாமி.

அப்படித்தான் அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்தில் எப்படியாவது திமுகவின் பெயரை சேர்த்துவிட வேண்டும் எனும் இழிவான நோக்கத்தோடு தொடர்ந்து யார் அந்த சார்? என வதந்தி அரசியலை நடத்தி வந்தார்.

அற்பத்தனமான புத்திக்கு இப்பொழுது விடை கிடைத்துவிட்டது, அண்ணா பல்கலைக்கழக வழக்கில் அல்ல, அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளுக்கு உதவிய அதிமுக 103 வது வட்டச்செயலாளர் சுதாகர் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். மேலும் சிறுமியின் புகாரை வாங்காமல் இழுத்தடித்த காவல் ஆய்வாளர் ராஜி என்பவரையும் தமிழ்நாடு அரசின் சிறப்பு புலனாய்வு குழு கைது செய்து விசாரணை நடத்தி வருகிறது. தனது கட்சியை சேர்ந்தவரைக் காப்பாற்ற பழனிசாமி யார் இந்த சார்? என நடத்திய கபட நாடகம் இன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் சிபிஐ விசாரணை வேண்டும் என்றும், தமிழ்நாடு அரசு உண்மையை மறைக்க சிபிஐ விசாரணையை மறுப்பது போலவும் பொதுவெளியில் பிதற்றி வந்தார் பழனிசாமி. இதோ உண்மை சந்திக்கு வந்து விட்டது. அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் மறைந்திருந்த அந்த சார் அதிமுக வட்டச் செயலாளர்தான்.

பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகள் தொடங்கி இராமேஸ்வரம் குளியலறை கேமரா வைத்த கமுகன், அண்ணாநகர் சிறுமி பாலியல் வழக்கு வரை பாலியல் குற்றாவாளி "சார்களின்" சரணாலயம் அதிமுக என்பது மீண்டுமொரு முறை அம்பலமாகியிருக்கிறது.

செப்டம்பர் மாதம் பதிவு செய்யப்பட்ட வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உடனடியான உறுதியான நீதியைப் பெற்றுத்தரவே சிபிஐ விசாரணைக்கு தமிழ்நாடு அரசு தடை வாங்கியது. சிபிஐ விசாரணை ஏற்படுத்தும் தாமதத்திற்கு பொள்ளாச்சி வழக்கே சான்று.

'அண்ணா, அண்ணா விட்டுடுங்க அண்ணா' என்று பொள்ளாச்சி பெண்கள் கதறிய குரலில் தமிழ்நாடே அதிர்ந்து போனது அந்த வழக்கில் குற்றவாளிகளை தப்பிக்க வைக்க தனது கள்ளக்கூட்டாளி பாஜகவோடு சேர்ந்து அதிமுக செய்த காரியங்கள் தான் இன்றும் அந்தக் கொடுமைக்கான நீதியை பெற்றுத்தர தாமதத்தை ஏற்படுத்தி உண்மை குற்றவாளிகளை காப்பாற்றி வருகிறது.

இந்திய அளவில் பெண்கள் மீதான கொடூரமான பாலியல் வன்கொடுமைகளை நிகழ்த்துவதில் முன்னணியில் இருக்கும் தனது கள்ளக்கூட்டணி பாஜகவிற்கு கொஞ்சமும் சளைத்த கட்சி அல்ல அதிமுக என்பது மற்றுமொருமுறை அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இனியும் யார் அந்த சார்? என்று பச்சைப் பொய் பழனிசாமி கேட்க விரும்பினால் கண்ணாடியைப் பார்த்துதான் கேட்க வேண்டும்.

இன்றைக்கு காவல் ஆய்வாளரையே கைது செய்திருப்பதன் மூலம் எத்தகையும் சார்பு மற்ற நேர்மையான விசாரணையை நடத்தி பாதிக்கப்பட்டோருக்கு விரைவான நீதியைப் பெற்று தரும் திராவிட மாடல் அரசின் வெளிப்படையான நிர்வாகத்திறன் மக்கள் மன்றத்தில் மீண்டுமொரு முறை உறுதியாகியுள்ளது.

அண்ணா நகர் வழக்கானாலும் சரி, அண்ணா பல்கலைக் கழக வழக்கானாலும் சரி பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையை நிகழ்த்திய எந்த "சாரும்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் கடுமையான நடவடிக்கைக்கு தப்பிக்க முடியாது. ஆனால் அந்த சார்கள் பலரும் அதிமுகவினராக இருப்பதுதான் வெட்க கேடு.

பாலியல் குற்றவாளிகளின் புகலிடமாக அதிமுகவை மாற்றி அவர்களை பாதுகாத்து வரும் பழனிசாமி தனது கள்ளக்கூட்டாளி பாஜகவுடன் சேர்ந்து கொண்டு இனியும் யார் அந்த சார்? என மக்களிடம் நாடகமாடினால் "யோக்கியன் வரான் சொம்பைத் தூக்கி உள்ளே வை" என மக்கள் புறக்கணித்து செல்வார்கள்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்தில் உடனடியாக குற்றவாளி ஞானசேகரன் கைது செய்யப்பட்டு விசாரணை தீவிரமாக நடைபெற்றுவந்தபோதும், தமிழ்நாடு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது போல திசைதிருப்பல் அரசியலில் ஏன் பழனிசாமி ஈடுபடுகிறார்? எனும் சந்தேகம் தமிழ்நாட்டு மக்களிடையே இருந்தது. அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் தனது கட்சிக்காரரை காப்பாற்ற அவர் நடத்திய கபட நாடகம்தான் அது என்பது இன்று மக்களிடம் அம்பலமாகிவிட்டது. தமிழ்நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை என பழனிசாமி நடத்தும் கபட நாடகம் இனி ஒரு நாளும் மக்களிடத்தில் எடுபடப்போவதில்லை.

பெண்கள் மீது எந்த வகையில் வன்முறை நிகழ்த்தப்பட்டாலும் அதை திராவிட மாடல் அரசு எந்த வகையிலும் அதை சகித்துக் கொள்ளாது, அப்படிபட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் வழிகாட்டியுள்ளார். முதலமைச்சரின் ஆட்சியில் பெண்களுக்கு குற்றமிழைத்த யாரும் சட்டத்தின் பிடியிலிருந்து ஒரு நாளும் தப்பிக்க முடியாது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கலைஞர் பாதை சிந்தனையை வளர்த்துவிடும் என்று அஞ்சுகிறார்கள்!

### முத்தமிழறிஞர் பதிப்பக வாசகர் சந்திப்பில் மதிவதனி பேச்சு



சென்னை. ஜன. 10 -

சென்னையில் நடைபெறும் 48வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சியை முத்தமிழறிஞர் பதிப்பகம் நடத்தி வருகிறது. இதில் 08.01.2025 அன்று திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் மதிவதனி கலந்துகொண்டு பேசினார். வாசகர்கள் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

**வாசிப்பு அதிகரிக்கிறது!**

விழாக்கள் நடைபெறும் இடங்களில் போக்குவரத்து நெரிசல் இருப்பது இயல்புதான். ஆனால் புத்தகக் காட்சிக்கு செல்வதற்கான இத்தனை நெரிசல் ஏற்படுவது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான். நூல்களை வாங்கி, வாசிப்பது என்பது அறிவுத்தேடல். மற்ற அரங்குகளிலும் எழுத்தாளர்கள் வாசகர்களை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுகிறது. ஆனால் வாசகர்களை அவர்களுடன் உரையாடவைக்கிற முயற்சியை முத்தமிழறிஞர் பதிப்பகம்தான் செய்துள்ளது.

பேசி, எழுதி வளர்ந்த இயக்கம் திராவிட இயக்கம் என்பதை எல்லோரும் சொல்வார்கள். ஆனால் ஒரு சின்ன திருத்தம். உண்மையைப் பேசி, எழுதி வளர்ந்த இயக்கம். மக்களுக்காக பேசி, எழுதி வளர்ந்த இயக்கம். அப்படி என்ன பேசினார்கள் என்று கேட்டால் மூன்றைச் சொல்லலாம். சமத்துவம், சமூக நீதி, சகோதரத்துவம் என்ற மூன்றுக்குள் திராவிட இயக்கத்தை அடக்கிவிடலாம். சமத்துவத்திற்கு எதிராக சாதி அமைப்பு இருக்கிறது. ஆனால் அதற்கு எதிராக சமத்துவத்தை வளர்க்கும் கல்விதான் முக்கியம் என்று தந்தை பெரியார் முதல் இன்றைய முதலமைச்சர் வரை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிவருகிறார்கள்.

இன்றைக்கு எல்லோரும் படித்திருக்கிறோம். மாநில சுயாட்சி என்றால் என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அதுதொடர்பான நூல்களை கொடுத்தால் வாசித்து தெரிந்துகொள்ளலாம். ஆனால் பெரியார், அண்ணா காலத்தில் நிலைமை அப்படியில்லை. எல்லோரும் படித்திருக்கவில்லை. அவர்களிடத்தில் நூல்களைக் கொடுத்தோ, பத்திரிகைகளைக் கொடுத்தோ இயக்கத்தின் கருத்தை புரிய வைத்துவிட முடியாது. அதனால் ஊர் ஊராகச் சென்று, தெரு தெருவாகச் சென்று பெரியாரும், அண்ணாவும் தொண்டை கிழிய பேசினார்கள். அதன் விளைவாகத்தான் நாம் இன்று இந்த இடத்தில் நிற்க முடிகிறது.

**கலைஞர் பாதை கொள்கைப்பாதை!**

இன்றைக்கு தி.மு.க.விற்கு இளைஞர் அணி தனியாக இருக்கிறது. ஆனால் தி.மு.க. தொடங்கப்பட்டபோது அண்ணாவிற்கே வயது நாற்பதுதான், கலைஞருக்கு 25. ஆனாலும் இந்த இயக்கத்தை தாங்கி நிற்கக்கூடிய பலமான தலைவராக கலைஞர் உருவெடுத்தார் என்றால் அதற்கு பணபலமோ, படை பலமோ காரணம் இல்லை. சாதிய பின்புலம், மத பின்புலமும் கிடையாது. ஆனாலும் அதையும் தாண்டி அவர் சாதித்தார் என்றால் அதற்கு கொள்கைதான் காரணம். அந்த கொள்கை பாதையைக் கண்டுதான், இன்றைக்கு கலைஞர் பாதை என்றால் சிலரை திடுக்கிடச் செய்கிறது. இந்த பாதையில் சென்றால் சிந்தனை வளர்ந்துவிடுமே என்று அதிர்ச்சி ஏற்படுகிறது. சமத்துவம் வந்துவிடுமே என்ற பயம் வருகிறது.

பல்கலைக்கழகங்களை உருவாக்கக்கூடிய உரிமை மாநிலங்களுக்கு உள்ளது என அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது. ஆனால் இந்த பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்க ஆளுநர்களுக்கு மட்டும்தான் அதிகாரம் இருக்கிறது என்று சொல்கிறது பல்கலைக் கழக மானியக்குழு. இதை எதிர்த்துக் கேட்பதுதான் மாநில சுயாட்சி. இப்படி மாநில சுயாட்சி ஆகட்டும், சமத்துவம், சமூக நீதிக் கொள்கைகள் ஆகட்டும், எதுவாக இருந்தாலும் அதை நாம் எடுத்துச் செல்ல படை வேண்டும். அந்த படை இளம் படையாக இருக்க வேண்டும். நம் இயக்கத்திற்கு தலைவர்களுக்கோ, தொண்டர்களுக்கோ பஞ்சம் வந்ததே இல்லை. பெரியார் வந்தார், அண்ணா வந்தார், கலைஞர் வந்தார், ஆசிரியர் வந்தார், இப்போது முதலமைச்சர் வந்திருக்கிறார், அவருக்குப் பிறகு அண்ணன் உதயநிதி இன்னும் வீரியமாக வந்து கொண்டிருக்கிறார்.

**அறிவுப்பஞ்சம் கூடாது!**

எனவே தலைவர்களுக்கு நமக்கு பஞ்சமே இல்லை. அதுபோல நம்முடைய இளைஞர் படையும் பஞ்சமே இல்லாமல் இருக்க வேண்டும். பஞ்சம் என்றால் பணப்பஞ்சம் இல்லை, அது இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால் அறிவுப்பஞ்சம் இருக்கக்கூடாது. சிந்தனைப் பஞ்சம் இருக்கக்கூடாது. அதற்கு நம்முடைய கருத்தியல் சார்ந்த நூல்களைப் படிக்க வேண்டும். வாசிப்புப் பழக்கம் இல்லாதவர்கள், யூடியூப் போன்ற வலைத்தளங்களில் திராவிட இயக்கக் கருத்தியலை பலர் பேசுகின்றனர், அவற்றை கேட்டு கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளலாம். தினசரி வாசிக்கிற பழக்கத்தை ஏற்படுத்திவிட்டால் அதன்பிறகு நூல்களை உங்களை விடாது. நிறைய வாசியுங்கள், எழுதுங்கள், நிறைய பேசுங்கள், வாய்ப்புக்கு நன்றி. இவ்வாறு மதிவதனி பேசினார்.

### சமூக வலைதளங்களில்

# உண்மைக்கு மாறான செய்திகள் வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்திடுக!

### பெருநகர சென்னை காவல் ஆணையரிடம் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி புகார்!



சென்னை, ஜன.10

சமூக வலைதளங்களில் உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திட கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சார்பில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் பெருநகர சென்னை காவல் ஆணையரிடம் புகார் அளித்துள்ளார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள்மீது சமூக ஊடகங்களில் வதந்திகள் மற்றும் அவதூறு வீடியோக்கள் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்தை பரப்பி வருவதை அறிந்த கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சார்பில் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் பெருநகர சென்னை காவல் ஆணையரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு :

நான் தி.மு.க.வின் சட்டப் பிரிவு இணைச் செயலாளராக உள்ளேன். எங்கள் அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதியைப் பற்றி சமூக ஊடகங்களில் நேர்மையற்ற கூறுகளால் பரப்பப்பட்ட சமீபத்திய ட்ரெண்டிங் தகவல் குறித்து நான் கவலைப் படுகிறேன். இந்த வாசகம் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான ஞானசேகர் குற்றம் சாட்டப்பட்டவர் தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்பதை நமது அமைப்புச் செயலாளர் ஒப்புக்கொண்டது போலவும், அந்தச் செய்தி புதிய தலைமுறை செய்திச் சேனலில் வந்ததாகவும் தெரிகிறது.

இது முழுக்க முழுக்க எங்கள் அமைப்புச் செயலாளரின் நற்பெயரையும், எங்கள் கட்சியின் நற்பெயரை யும் குறைக்கும் வகையில் சமூக ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரச்சாரமாகும்.

அண்ணா பல்கலைக் கழக விவகாரம் தற்போது பரபரப்பாக உள்ள நிலையில், அனைத்து எதிர்க்கட்சிகளும் எப்படியாவது ஆளுங்கட்சியை கயிறு கட்டி, அரசியல் முன்னிலை பெற வேண்டும் என்ற நோக்கில் இந்த விவகாரத்தில் இணைக்க முயற்சிக்கின்றன. பொதுவாக சமூக ஊடகங்களில் வீடியோக்கள் மற்றும் செய்திகளின் உண்மைத்தன்மையை சரிபார்க்கும் நியூஸ்செக்கர் சேனல், உண்மை உண்மைகளை சரிபார்த்து, அந்த உண்மை தவறானது என்று அறிவித்துள்ளது. உங்கள் சரிபார்ப்பிற்காக மேற்படி செய்தியின் நகலையும் இணைத்துள்ளேன். இதுபோன்ற அவதூறான புழக்கத்தில் ஈடுபட்ட மற்றும் உதவிய அனைவருக்கும் எதிராக தகுந்த கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அப்புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.




மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சென்னை பள்ளி மாணவர்களின் 100% தேர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களின் கல்விச்சுற்றுலாவினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (09.01.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த. விசுவநாதன், கல்வி அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

### சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# விருகம்பாக்கம் தொகுதியில் 11,000 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி – எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ – காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜன. 10

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் தொகுதியில் தமிழ் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் சமத்துவப் பொங்கல் விழா இன்று (10.1.2025 வெள்ளிக்கிழமை) 11,000 நபர்களுக்கு கொடுத்து மகிழும் இனிய நிகழ்ச்சிகள் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா தலைமையில் நடைபெறுகிறது.

பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறும் விவரம் வருமாறு:

இன்று (10.1.2025 வெள்ளிக்கிழமை) மாலை 5.00 கலைஞர் நகர், கன்னிகாபுரம் பகுதியில் 1200 நபர்களுக்கும், நாளை (11.1.2025 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபத்தில் 3600 கழகத் தோழர்களுக்கும், நாளை(11.1.2025 சனிக்கிழமை) மாலை 7 மணிக்கு, மணி மஹால், கலைஞர் நகரில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் 450 சகோதரர்களுக்கும், 12.1.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு அய்யாபுரம் பகுதியில் 600 நபர்களுக்கும், மாலை 6 மணிக்கு, கலைஞர் நகர் சிவலிங்கபுரம் பகுதியில் 1400 நபர்களுக்கும், 13.1.2025 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு, ராணி அண்ணா நகர், கலைஞர் நகரில், 1900 நபர்களுக்கும், 13.1.2025 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு, ஜாபர்கான் பேட்டை, எம்.எல்.ஏ. இல்லத்தில் சமூக ஆர்வலர்கள், பொதுநல சங்க நிர்வாகிகள், ஊடகவியலாளர்கள், தோழர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா மற்றும் வாசு கிபாண்டியன், உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். வட்டக் கழகச் செயலாளர்கள் கோயம்பேடு பொன்.லோகு, பூக்கடை ஆர். பழனிசாமி, ராஜ்.செழியன், பி.கே.குமார், அ.கதிரேசன் வழக்கறிஞர் கே.சதீஷ்கண்ணன், சோ.செந்தில்குமார், எஸ்.மைக்கேல், மு.கோவிந்தராஜன், வீ.ஏ.ராஜா, எஸ்.பாஸ்கரன், தஞ்சை பாபு மற்றும் சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.விநாயகமூர்த்தி, ச.சங்கர்கணேஷ், ஆர்.கிருஷ்ணகுமார், ஜெ.இ.பாண்டியன், கா.வீ.தியாகராஜன், செ.ரவி, கோட்டூர் எஸ்.பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு பொங்கல் தொகுப்புகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, துணை மேயர் மு.மகேஷ்குமார், கணக்கு நிலைக்குழுத் தலைவர் க.தனசேகரன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், மாநில வர்த்தக அணி செயலாளர் காசி.முத்துமாணிக்கம், தொகுதிப் பார்வையாளர் வே.உமாகாந்த், மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வே.கௌதமன், மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்கள் ரத்னா லோகேஸ்வரன், மருத்துவர் யாழினி மற்றும் நிலவரசி துரைராஜ் எம்.சி, சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா, சையத், ராமமூர்த்தி, சுப.முத்துவேல், மு.மேகநாதன், எஸ்.அயுபக்கர், க.சமையன், அய்யாவு, பழனி, இரா. சங்கர், சி.நந்தகோபால், த.முத்துமாரியப்பன், எஸ். கருப்பசாமி, எம்.வீரா, எஸ். ரவி, ஏ.ஜெகதீசன், போஸ், பழனியப்பன், பூ.ராஜா, கே. முருகன், க.இளங்கோ, என். ரவி, பா.தினேஷ்குமார், சு. இளங்கோவன், சொ. ஜெயகுமார், வி.ச.சங்கரன், க.அர்ச்சுனன், ச.ரா.சீனிவாசன், ஆர். டி.நல்லேந்திரன், கே.பால முருகன், அர. அ.எழில்வாணன், அ.ஸ்ரீதர், எஸ்.சண்முகநாதன், ப.தென்னரசு, சென்னை அரங்கநாதன், பா.பெரியசாமி, லட்சுமி, பா.மேகலா, ஏ.முருதுராம், உ.ரஹ்மத்துல்லா, என்.எம்.முகமது ரியாஸ், பி.சுரேஷ், நிவேதிதா, பாஸ்கர், உ.சீனிவாசன், ச.பொன்னுரங்கம், பா.பாலமுருகன், எம்.மாதவன், கே.வி.எஸ்.சுரேஷ், உ.நிலவரசன், அனல் அய்யப்பன், உ.கோட்டீஸ்வரன், எஸ்.ஆனந்த்குமார், ஏ.எம்.ரவி மெயயால், ஆர்.சி. மோகன், வி.ஏ.மகாதேவன், ஆ.நசீர், டி.கலீம், உ.எல்.மகேஷ், து. ராஜா, எஸ்.முருகன், பூங்குழலி, ஆர்.விஜயலட்சுமி, பா.குமரன், கே.ராஜேஷ், பி.கசாலி, பொன்.பாஸ்கர், கே.வெங்கடேசன், இரா. பாஸ்கரன், பொன்.கோவிந்தராஜன், டி.எஸ்.பி.தமிழ்செல்வன், தலைமைக் கழக, மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் நிர்வாகிள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி அரங்கத்துறை** அ.து.ந.க.எண்.அ3 / 1448 / 2024

**மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு (மறு ஒப்பம்) மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**மண்டலம் - 1 முதல் 15 வரை உள்ள விளையாட்டுத்திடல்களை மேற்பார்வையிட விளையாட்டுத்திடல் பயிற்சியாளர்கள் (Play Ground Instructors) 12 எண்ணிக்கையில் நியமனம் செய்யும் பணி**

**பணியின் உத்தேச தொகை ரூ.85.19 இலட்சம்**

முன்வைப்பு தொகை :- பணியின் மதிப்பில் 1% : ரூ.85,200/-

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **30.01.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **31.01.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 123 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)**